**அக்டோபர் – 21**

# TNPSC துளிகள்

- டெல்லி சுற்றுலாக் கழகமானது டெல்லி அரசாங்கத்துடன் இணைந்து, அந்நகரத்தின் நாகரிகம் மற்றும் அதன் சிறப்பான வரலாற்றைக் கொண்டாடும் வகையில் 'ஷாப்பூர் ஜாட் இலையுதிர் விழா'வின் இரண்டாவது பதிப்பை ஏற்பாடு செய்து கொண்டு இருக்கின்றது.
    - ஷாப்பூர் ஜாட் நகரின் பழமையான கிராமங்களில் ஒன்றாகும். மேலும் குயவர்கள், ஓவியர்கள், வடிவமைப்பாளர்கள், பட்டறைகள், பெண்கள் அழகு சாதன கடைகள், வரலாற்றுக் கல்லறைகள், சிற்றுண்டியகங்கள் மற்றும் பலவற்றையும் இது கொண்டுள்ளது. இது அலாவுதீன் கில்ஜியின் இடைக்கால வரலாற்று நகரான சிரி கோட்டையின் இடிபாடுகளுக்கு அருகில் உள்ளது.
- குஜராத் பிரிவைச் சேர்ந்த மூத்த ஐ.பி.எஸ் அதிகாரி அனுப் குமார் சிங் தேசிய பாதுகாப்புப் படையின் பொது இயக்குநர் ஜெனரலாக நியமிக்கப் பட்டுள்ளார்.
    - 1984 ஆம் ஆண்டில் பயங்கரவாதம் மற்றும் கடத்தல் போன்ற சம்பவங்களை எதிர்ப்பதற்கான ஒரு கூட்டாட்சி மற்றும் அவசரகாலப் படையாக தேசிய பாதுகாப்புப் படை உருவாக்கப் பட்டது. தேசிய பாதுகாப்புப் படையின் 35 வது எழுச்சி தினம் சமீபத்தில் அக்டோபர் 15 ஆம் தேதியன்று ஹரியானாவில் உள்ள மானேசர் என்னுமிடத்தில் கொண்டாடப்பட்டது.
- எந்தவொரு காரணத்தையும் குறிப்பிடாமல் அசாம் தேசிய குடிமக்கள் பதிவேட்டின் (என்.ஆர்.சி) ஒருங்கிணைப்பாளர் பிரதீக் ஹஜேலா ஐ.ஏ.எஸ் என்ற அதிகாரியை மத்தியப் பிரதேசத்திற்கு மாற்றுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
    - என்.ஆர்.சி பற்றிய கூடுதல் தகவலுக்கு தயவு செய்து இங்கே சொடுக்கவும்: : https://www.tnpscthervupettagam.com/articles-detail/national-register-of-citizens-nrc
- இரண்டு லத்தீன் அமெரிக்க நாடுகள் - பிரேசில் மற்றும் வெனிசுலா - ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளன.
    - 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா பொதுச் சபையானது, 47 உறுப்பினர்களைக் கொண்ட மனித உரிமைகள் பேரவையில் 14 உறுப்பினர்களை 2020 ஜனவரி 1 முதல் மூன்று ஆண்டு காலத்திற்குத் தேர்வு செய்தது.
    - அதன் விதிகளின் கீழ், புவியியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த பிராந்தியங்களுக்கு (ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்கன்) என்று இடங்கள் ஒதுக்கப் படுகின்றன.
- 2019 ஆம் ஆண்டின் ஜூலை-செப்டம்பர் காலாண்டில் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 6% ஆக உள்ளது. இது கடந்த 30 ஆண்டுகளில் பதிவான மிகக் குறைந்த வளர்ச்சி விகிதமாக மாறியுள்ளது.
    - அமெரிக்கா-சீனா வர்த்தகப் போர் சீனாவின் வேலைவாய்ப்பு மற்றும் ஊதிய நிலைமையை மோசமாக்கியுள்ளது. இதனால் பெரு நிறுவனங்களும் சீனாவில் மூலதன முதலீடு செய்வதைத் தவிர்த்தன.

# தேசியச் செய்திகள்

## ஆசியாவின் பழமையான மூங்கில்

- அசாமில் உள்ள மக்கம் நிலக்கரிப் பகுதியில் 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய இரண்டு புதைபடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 2018 ஆம் ஆண்டு நிலவரப்படி 49,000க்கும் மேற்பட்ட தாவர இனங்கள் பதிவாகியுள்ள நிலையில், உலகின் அனைத்துத் தாவரங்களிலும் சுமார் 11.5% இந்தியாவில் உள்ளது.
- இப்போது, ஒரு புதிய புதைபடிவ பதிவானது, ஆசிய மூங்கில்களின் பிறப்பிடமாக இந்தியா இருப்பதைக் காட்டுகிறது. அவை சுமார் 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் வடகிழக்கு பகுதியில் உருவாக்கப்பட்டன.
- இவை சுமார் 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய ஒலிகோசீன் என்ற காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.
- இப்போது சீனாவின் யுன்னான் மாகாணம் மூங்கில்களில் மிக அதிகமான பன்முகத் தன்மையைக் கொண்டுள்ளது. ஆனால் அந்த பிராந்தியத்தில் கிடைக்கப் பெற்ற மிகப் பழமையான புதைபடிவமானது 20 மில்லியன் ஆண்டுகளுக்கும் குறைவாக உள்ளது.
- இதன் மூலமாக ஆசிய மூங்கில்கள் இந்தியாவில் தோன்றியவை என்றும் பின்னர் அவை அங்கு (சீனாவிற்கு) பரப்பப் பட்டுள்ளன என்றும் தெளிவாகத் தெரிகிறது.
- இந்த கண்டுபிடிப்பு ஆசியாவிற்கு மூங்கில் வந்தது ஐரோப்பாவிலிருந்து அல்ல, மாறாக அது இந்தியாவிலிருந்து வந்தது என்ற கோட்பாட்டை மேலும் பலப்படுத்துகிறது.
- ஐரோப்பிய மூங்கில் புதைபடிவம் சுமார் 50 மில்லியன் ஆண்டுகள் பழமையானது.
- இந்தியாவில் மூங்கில் புதைபடிவங்கள் மிகவும் பொதுவானவை அல்ல. ஏனெனில் அவை இமயமலையில் உள்ள சிவாலிக் வண்டல்களில் இருந்து மட்டுமே அறியப் படுகின்றன.

## அடுத்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி - சரத் அரவிந்த் போப்டே

- வயது மூப்பின் அடிப்படையில் தனக்கு அடுத்துப் பதவிக்கு வருபவரை நியமிக்க, இந்தியத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தில் நீதிபதி சரத் அரவிந்த் போப்டேவின் பெயரைப் பரிந்துரைத்துள்ளார்.
- இந்தியத் தலைமை நீதிபதி கோகாய்க்குப் பிறகு உச்சநீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக நீதிபதி போப்டே உள்ளார்.
- வழக்கமாக பதவியிலிருந்து விடைபெறும் தலைமை நீதிபதி தனக்கு அடுத்துப் பதவிக்கு வருபவர் பற்றிய பரிந்துரையை 30 நாட்களுக்கு முன்னர் அனுப்பி, அடுத்த இந்தியத் தலைமை நீதிபதியை நியமிக்கும் பணியைத் தொடங்குகிறார்.
- போப்டே முன்னாள் இந்திய தலைமை நீதிபதி முகமது ஹிதயத்துல்லாவுக்குப் பிறகு மகாராஷ்டிராவின் நாக்பூர் பிராந்தியத்தைச் சேர்ந்த இரண்டாவது நீதிபதியாகவும், இந்தியாவின் 47வது தலைமை நீதிபதியாகவும் இருப்பார்.

## ஜொமேட்டோவின் உயிரி டீசல்

- உணவகத் திரட்டு மற்றும் உணவு விநியோக சேவை நிறுவனமான ஜொமேட்டோ மற்றும் உயிரி டீசல் உற்பத்தியாளரான பயோடி எனர்ஜி என்ற நிறுவனம் ஆகியவை பயன்படுத்திய சமையல் எண்ணெயிலிருந்து உயிரி டீசலை உற்பத்தி செய்ய ஒரு கூட்டாண்மை ஒப்பந்தத்தைச் செய்துள்ளன.

- ஜொமேட்டோ நிறுவனம் நாடு முழுவதும் உள்ள உணவகங்களிலிருந்துப் பயன்படுத்திய சமையல் எண்ணெயை சேகரித்துப் பதப்படுத்தி உயிரி டீசலாக மாற்றும்.
- காய்கறி எண்ணெயை அதிக அளவில் பயன்படுத்துவோர் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- இது 2022 ஆம் ஆண்டிற்குள் 220 கோடி லிட்டர் என்ற அளவிற்கு பயன்படுத்திய சமையல் எண்ணெயிலிருந்து உயிரி டீசல் உற்பத்தி செய்யும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- பயன்படுத்திய சமையல் எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் உயர் இரத்த அழுத்தம், பெருந்தமனி தடிப்பு, அல்சைமர் மற்றும் கல்லீரல் வியாதிகள் போன்ற நோய்கள் ஏற்படலாம்.

## தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் நூற்றாண்டு ஆண்டு விழா

- ஹைதராபாத்தில் உள்ள தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் (National Institute of Nutrition - NIN) சிறப்பு நினைவு அஞ்சல் முத்திரையை மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் வெளியிட்டார்.
- இந்திய அஞ்சல்துறையின் "கார்ப்பரேட் மை ஸ்டாம்ப்" என்ற திட்டத்தின் கீழ் இந்த முத்திரை வெளியிடப் பட்டுள்ளது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் (Indian Council of Medical Research - ICMR) கீழ் உள்ள ஒரு பழமையான நிறுவனம் தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் ஆகும்.
- தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் நூற்றாண்டு ஆண்டு விழாவிற்கான கருப்பொருள் 'ஊட்டச்சத்தின் மூலம் தேசத்தை மேம்படுத்துதல்' என்பதாகும்.

### *இந்தியாவில் ஊட்டச்சத்து அறிவியலின் தந்தை*

- தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவை நினைவு கூரும் வகையில் நிறுவப்பட்ட "ICMR-NIN-நூற்றாண்டு விருது" என அழைக்கப் படுகின்ற ஒருமுறை வழங்கப்படும் விருதானது மருத்துவர் சி.கோபாலனுக்கு அவருடைய மரணத்திற்குப் பின் வழங்கப்பட்டது.
- சேலத்தை பூர்வீகமாகக் கொண்டவரும், சென்னை எம்.எம்.சியின் பழைய மாணவருமான மருத்துவர் கோபாலன் இந்தியாவில் ஊட்டச்சத்து அறிவியலின் தந்தையாக கருதப் படுகிறார்.
- அவருக்கு 2002 ஆம் ஆண்டில் பத்ம பூஷண் விருது வழங்கப்பட்டது.
- இந்திய மக்களின் ஊட்டச்சத்து நிலை குறித்த அவரது ஆராய்ச்சியானது பின்வருவன போன்ற பல தேசிய ஊட்டச்சத்து திட்டங்களுக்கான அடித்தளத்தை அமைத்தது.
  - இரத்த சோகைக் கட்டுப்பாடு
  - வைட்டமின் ஏ சேர்மானம்
  - ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவைகள்
  - உலகளாவிய உப்பு அயோடிசேஷன் மூலம் காய்டர் கட்டுப்பாடு




## கூட்டுப் பயிற்சி – ஈஸ்டர்ன் ப்ரிட்ஜ் V

- இந்திய விமானப் படையானது ராயல் ஏர் ஃபோர்ஸ் ஓமன் (ராஃபோ) உடன் EX EASTERN BRIDGE-V என பெயரிடப்பட்ட இருதரப்பு கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கிறது. இது 2019 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதத்தின் 17-26 தேதிகளில் ஓமனின் விமானப் படை தளமான மசிராவில் நடத்தப் பட இருக்கின்றது.
- கடைசிப் பயிற்சியான EX EASTERN BRIDGE-IV என்பது 2017 ஆம் ஆண்டில் ஜாம்நகரில் நடத்தப் பட்டது.
- முதல் முறையாக, மிக் -29 போர் விமானம் இந்தியாவுக்கு வெளியே ஒரு சர்வதேசப் பயிற்சியில் பங்கேற்கவுள்ளது.
- மிக் -29 மற்றும் சி -17 விமானங்களைப் பயிற்சியில் பங்கேற்கும் இந்திய விமானப் படை கொண்டுள்ளது.
- மிக் -29 ஆனது ராயல் ஏர் ஃபோர்ஸ் ஓமானின் யூரோஃபைட்டர் டைபூன், எஃப் -16 மற்றும் ஹாக் உடன் இணைந்து பயிற்சி பெறும்.

# சர்வதேசச் செய்திகள்


## ஆபரேஷன் அமைதி வசந்தம்

- இது வடகிழக்கு சிரியாவில் சிரிய ஜனநாயகப் படைகள் மற்றும் சிரிய இராணுவத்திற்கு எதிராக துருக்கிய ஆயுதப் படைகள் மற்றும் சிரிய தேசிய இராணுவம் நடத்துகின்ற ஒரு இராணுவ நடவடிக்கையாகும்.
- சமீபத்தில் அமெரிக்க நிர்வாகம் அமெரிக்கத் துருப்புக்களை வடகிழக்கு சிரியாவிலிருந்து விலகுமாறு உத்தரவிட்டது. இதுவரை அங்கு அமெரிக்கா தனது குர்திஷ் நட்புப் படைகளுக்கு ஆதரவளித்து வந்தது.
- துருக்கியைப் பொறுத்தவரை, இந்த நடவடிக்கை எல்லைப் பகுதியிலிருந்து சிரிய ஜனநாயகப் படைகளை வெளியேற்றுவதையும், வடக்கு சிரியாவில் 30 கி.மீ தூரத்தில் (20 மைல்) ஒரு "பாதுகாப்பான மண்டலத்தை" உருவாக்குவதையும், துருக்கியில் உள்ள 3.6 மில்லியன் சிரிய அகதிகளில் சிலரை அங்கு மீள்குடியேற்றம் செய்யப்படுவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- ❖ குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியுடனான உறவின் காரணமாக சிரிய ஜனநாயகப் படைகளானது துருக்கியால் ஒரு பயங்கரவாத அமைப்பாக பார்க்கப் படுகிறது. ஆனால் சிரிய ஜனநாயகப் படைகளானது ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிற்கு (இஸ்லாமிய அரசு ஈராக் மற்றும் சிரியா) எதிராக அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளால் நட்புப் படையாகக் நாடாக கருதப் படுகிறது.

*குர்துகள் பற்றி*

- ❖ குர்துகள் மேற்கு ஆசியாவின் மலைப் பிரதேசமான குர்திஸ்தான் என அழைக்கப்படும் ஈரானிய இனக் குழு ஆவர். இவர்கள் தென்கிழக்கு துருக்கி, வடமேற்கு ஈரான், வடக்கு ஈராக் மற்றும் வடக்கு சிரியா வரை பரவியுள்ளனர்.
- ❖ ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு விசுவாசமான அரசாங்கப் படைகள், வேறு இடங்களில் சண்டையிடத் திரும்பியதால், சிரிய உள்நாட்டுப் போரில் போராடும் குர்துகள் வடக்கு சிரியாவின் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்த முடிந்தது.
- ❖ தங்கள் சொந்த அரசாங்கத்தை நிறுவிய பின்னர், அவர்கள் கூட்டாட்சி சிரியாவில் சுயாட்சிக்கு அழைப்பு விடுத்தனர்.




## விண்வெளியில் நடந்த முதல் பெண்கள் குழு

- ❖ மின்சக்தி வலையமைப்பின் உடைந்த பகுதியை சரிசெய்ய சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து வெளியே பெண்கள் குழு ஒன்று மிதந்த போது உலகிலேயே முதல் முறையாக பெண்கள் மட்டுமே பங்கேற்ற விண்வெளி நடை பயணம் என்ற ஒரு வரலாற்றுச் சாதனையை அக்குழு படைத்தது.
- ❖ இந்த அரை நூற்றாண்டு கால அளவில் விண்வெளியில் முதல் முறையாக "ஆண் துணையின்றி" பெண்கள் ஒரு குழுவாக விண்வெளியில் மிதந்த இந்நிகழ்வில் நாசா விண்வெளி வீராங்கனைகளான கிறிஸ்டினா கோச் மற்றும் ஜெசிகா மீர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.
- ❖ 35 ஆண்டுகளுக்கு முன்பு விண்வெளி நடை பயணம் மேற்கொண்ட அமெரிக்காவின் முதல் பெண் விண்வெளி வீரர் கேத்தி சல்லிவன் இந்த அணிக்கு வாழ்த்து

தெரிவித்துள்ளார்.

- ஜெசிகா மீர் விண்வெளிப் பயணத்தை நடத்திய உலகின் 228வது நபராகவும், 15வது பெண்ணாகவும் ஆனார்.
- கோச்சிற்கு இது நான்காவது விண்வெளிப் பயணமாகும். அவர் இந்த 11 மாத பயணத்தில் ஏழு மாதங்கள் விண்வெளியில் வசிக்க இருக்கின்றார். இது ஒரு பெண் விண்வெளி வீராங்கனையால் மேற்கொள்ளப்படும் ஒரு மிக நீண்ட கால அளவு கொண்ட வசிப்பிடத் திட்டம் ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★